தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### 8 இடங்களில் வெயில் சதம்

**சென்னை,**

தமிழகத்தில் அதிகபட்சமாக கரூர் பரமத்திவேலூர், மதுரை, பாளையங்கோட்டை, திருச்சி உள்ளிட்ட இடங்களில் வெள்ளிக்கிழமை 102 டிகிரி வெயில் பதிவானது.

வெயில் பதிவு விவரம்

(டிகிரி பாரன்ஹீட்டில்):

திருச்சி, கரூர் பரமத்தி வேலூர்,

மதுரை, பாளையங்கோட்டை,

திருப்பத்தூர் (வேலூர்) 102

வேலூர், சேலம் 101

தருமபுரி 100

கோவை 99

சென்னை மீனம்பாக்கம் 95

சென்னை நுங்கம்பாக்கம் 93

கொடைக்கானல் 72

### பகலில் வெப்பம் 105 டிகிரிக்கும் மேல் அதிகரிக்கும்

**நாமக்கல்,**

மழைக்கான வாய்ப்பும், மேகமூட்டமும் காணப்படாத நிலையில், தற்போதைய நிலையில் பகலில் வெப்ப அளவுகள் 104.4 டிகிரி பாரன்ஹீட் முதல் 105.8 டிகிரி பாரன்ஹீட் வரை அதிகரிக்கும் என்று நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 4 நாள்களுக்கு (ஏப்ரல் 5 முதல் 8-ஆம் தேதி வரை) வானம் தெளிவானதாகவும், மழையின்றியும் காணப்படும். காற்றின் திசைவேகம் மணிக்கு 5 கிமீ முதல் 6 கிமீ வேகத்தில் தெற்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலைக் குறைந்தபட்சம் 75.2 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 106.8 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 18 சதம் முதல் அதிகபட்சம் 70 சதம் வரை இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு..: மழைக்கான வாய்ப்பும், மேகமூட்டமும் காணப்படாத நிலையில், பகலில் வெப்ப அளவு 104.4 டிகிரி பாரன்ஹீட் முதல் 105.8 டிகிரி பாரன்ஹீட் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேபோல, இரவு வெப்பம் 77.0 டிகிரி பாரன்ஹீட் வரை அதிகரிக்கக் கூடும். இதனால், பண்ணைகளில் கோழிகளுக்கு தண்ணீரின் தேவை அதிகரிக்கும்.

எனவே, தண்ணீர் குடிக்கும் அளவை அதிகரிக்கும் வகையில், குழாய் நீரை எப்போதும் குளிர்ந்த நிலையில் வைத்திருக்கும் முறைகளைப் பின்பற்றிட வேண்டும். குறிப்பாக, மாலையில் 2 மணி முதல் 6 மணி வரை கோழிகள் நீரைக் குடிக்கும் வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு..:தற்போது வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் காடைகளுக்கு சுத்தமான குடிநீர் மிக அவசியமாகும். ஆயிரம் காடைகள் உள்ள பண்ணைக்கு நாள் ஒன்றுக்கு 100 லிட்டர் முதல் 150 லிட்டர் வரை குடிநீர் தேவைப்படுகிறது.

குடிநீரில் அதிகளவு நுண்ணுயிரிகள், நச்சுத் தன்மையுள்ள தாது உப்புகள் இருந்தால், அந்தக் குடிநீர் காடையின் உடல்நலத்தை பாதிக்கும். இதைத் தவிர்க்க 1000 லிட்டர் தண்ணீரில் 8 கிராம் பிளீச்சிங் பவுடர் கலந்து பின் கொடுக்க வேண்டும் அல்லது 10 லிட்டர் தண்ணீருக்கு 1 மிலி வீதம் கலந்து அளிக்கலாம்.

கொல்லிமலைப் பலா பழங்களில் ஸ்பிட்டில் வண்டு எனும் எச்சில் பூச்சி தாக்குதல் அதிகளவில் காணப்படுகிறது. தாக்கப்பட்ட மரத்தின் இலைகள் மஞ்சள் நிறமாகவும், சுருண்டும் காணப்படும்.

தாக்கப்பட்ட நுனித் தண்டுகள், இளம் தண்டுகள் காய்ந்துவிடும். இதனால், காய்பிடிப்பு அதிகளவில் பாதிக்கப்படும். ஆண்டுதோறும் கிளைகளை கவாத்து

செய்தல், ஒரு லிட்டர் தண்ணீருக்கு குயினால்ஃபாஸ் மருந்து 2 மிலி அல்லது மோனோகுரோட்டோஃபாஸ் 2 மிலியை ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிப்பதன் மூலம் இந்தப் பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பல்லடம் கறிக்கோழி: கொள்முதல் விலையில் மாற்றமில்லை

**பல்லடம்,**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம், பல்லடத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் கறிக்கோழி பண்ணைக்கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

வியாழக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 68-ஆக இருந்தது. விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால் வெள்ளிக்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு வெள்ளிக்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ. 2.40, சென்னையில் ரூ. 2.75.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 52.01 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 52.01 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 657 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீரும், வாய்க்காலில் 2,200 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 4.9 டி.எம்.சி.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### காற்று திசை மாறியதால் தணிந்தது கடும் வெப்பம்

**சென்னை**: 'கீழ்திசை காற்று காரணமாக, சென்னையில் வெப்பம் சற்றே தணிந்துள்ளது' என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக்கடல் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன் உருவான காற்றழுத் தாழ்வு நிலை காரணமாக, தமிழகத்தின் தென் பகுதியில் சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக, வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. ஆனால், இதுவரை மழை பெய்யவில்லை. இருப்பினும், இன்னும் மூன்று தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாகவும், தமிழகத்தின் வடக்கு பகுதிகள் மற்றும் புதுச்சேரியில், வறண்ட வானிலையே நிலவும் என்றும், வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. கடந்த 10 நாட்களுக்கும் மேலாக தமிழக மக்களை வாட்டி வதைத்த கோடை வெப்பம், நேற்று சற்றே தணிந்திருந்தது. மார்ச் 30 மற்றும் இம்மாதம் 1,2 தேதிகளில், வேலூர், திருப்பத்தூர், திருச்சி, திருத்தணியில், 40 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகி இருந்தது. இந்த கொடுமையான வெப்பம், சற்றே குறைந்து, நேற்று முன்தினம், வேலூர், திருப்பத்தூர், திருத்தணியில், 38, சேலம், மதுரை, 39 , சென்னையில், 34, கோவையில், 37 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ளது. சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குனர் ரமணன் கூறுகையில், "மேற்கு திசையில் இருந்த காற்று வீசியதால் அதிக வெப்பம் இருந்தது. தற்போது கீழ் திசை காற்று வீசுவதால், வெப்பம் சற்றே குறைந்துள்ளது," என்றார்.

### ஏப்., 15 முதல் 45 நாள் வங்கக்கடல் மீன்கள் 'பிசி':'தொந்தரவு செய்யக்கூடாத' தடைக்காலம் அமல்

மீன்களின் இன விருத்தியை கருத்தில் கொண்டு, தமிழகம், புதுச்சேரி, ஆந்திரா உள்ளிட்ட, கிழக்கு கடற்கரை பகுதிகளில், 45 நாட்கள் மீன்பிடி தடைக்காலம், ஏப்., 15ம் முதல் அமலுக்கு வருகிறது. இன விருத்தி காலம் கிழக்கு கடற்கரை பகுதியில், ஏப்ரல், மே மாதங்கள், மீன் உள்ளிட்ட கடல் உயிரிகளின் இனவிருத்தி காலமாக,

மத்திய வேளாண் அமைச்சகம் கண்டறிந்துள்ளது. அந்த நாட்களில், மீன்கள் ஆழ்கடலில் முட்டையிட்டு, குஞ்சு பொரித்து இனவிருத்தி செய்யும் என்பதால், கடலில் மீன் வளத்தை பெருக்கும் நோக்கத்தில், இந்த கால கட்டத்தில், 45 நாட்கள் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டு வருகிறது.

இதன்படி, தமிழகம், புதுச்சேரி, ஆந்திரா கடல் பகுதிகளில், 45 நாள் மீன்பிடி தடை, ஏப்., 15ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது. இந்த நாட்களில், ஆழ்கடலில் சென்று மீன் பிடிக்கும் விசை படகுகள், இழுவை படகுகளுக்கு அனுமதி கிடையாது. சென்னையில், 1,300 விசைப் படகுகள் உட்பட, தமிழகம் முழுவதும், 13 ஆயிரம் விசைப் படகுகள், கடலுக்குள் மீன்பிடிக்க செல்லாது; கரையில் ஓய்வெடுக்கும். இதனால், மீன் தொழில் ஒட்டுமொத்தமாக முடங்கும். சிறு பைபர் படகுகள், கட்டு மரங்கள் வாயிலாக மீன்பிடி தொழில் நடந்தாலும், குறைந்த அளவே மீன்கள் கிடைக்கும்.

கர்நாடகா, மகாராஷ்டிராவில் இருந்து, மீன் வரத்து இருந்தாலும், தேவையில், பத்தில் ஒரு பகுதியே கிடைக்கும் என்பதால், மீன்கள் விலை, பெருமளவு உயரும் அபாயம் உள்ளது.

தடைக்கால நிவாரணம் மீன்பிடி தடைக்காலத்தில், மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படையும் என்பதால், 3.13 லட்சம் மீனவ குடும்பங்களுக்கு, தமிழக அரசு, தலா, 2,000 ரூபாய் தடைக்கால நிவாரணம் வழங்கி வருகிறது. தடைக்காலத்தை, படகுகளை சீரமைக்க, மீனவர்கள் பயன்படுத்திக் கொள்வர்.

## வெள்ளரி பிஞ்சு பயிரிடுவதில் விவசாயிகள்ஆர்வம்:சுட்டெரிக்கும் வெயிலால் விற்பனை ஜோர்

**திண்டிவனம்**: சுட்டெரிக்கும் வெயிலின் தாக்கத்தை சமாளிக்க பொதுமக்கள் அதிகம் வாங்கும் வெள்ளரி பிஞ்சு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தமிழகத்தில் ஆண்டுதோறும், மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் வெயிலின் தாக்கம் அதிகம் இருக்கும். இந்தாண்டு பிப்ரவரி மாதமே வெயில் சுட்டெரிக்க துவங்கியது. பொதுமக்கள் வெயிலில் வெளியில் வர முடியாமல் கடும் அவதிப்பட்டு வருகின்றனர்.

ஆர்வம்:வெயில் காலங்களில் உடலில் ஏற்படும் சூட்டை தணிக்க தர்பூசணி, வெள்ளரி பழம், வெள்ளரி பிஞ்சு மற்றும் பழங்களை பொதுமக்கள் அதிகளவில் விரும்பி சாப்பிடுவர். இதற்காக, காலங்களுக்கு ஏற்றார் போல், தர்பூசணி, வெள் ளரி போன்ற குறுகிய கால பயிர்களை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். திண்டிவனம் சுற்றுப்பகுதிகளில் உள்ள எடையான்குளம், எண்டியூர், ஓமந்தூர், மொளசூர், எறையானூர் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் தங்களின் நிலங்களில் தற்போது வெள்ளரி பிஞ்சு பயிர் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். நாற்பது நாள் பயிரான வெள்ளரி பிஞ்சு தை மாதம் விதைக்கப்பட்டு, மாசி மாதம் முதல் அறுவடை செய்யப்படுகிறது.

இந்த செடிக்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். காம்பளக்ஸ், டி.ஏ.பி., போன்ற உரங்கள் போட்டு பராமரிக்க படுக்கிறது.

அதிக செலவு:உரம் விலை உயர்வு, கூலி ஆட்களுக்கு அதிகளவு கூலி போன்றவற்றால், கடந்த ஆண்டை விட தற்போது சாகுபடி செய்ய அதிக செலவு ஏற்படுகிறது. இந்த பயிர் மழை இல்லாமல் இருந்தால், மாசி மாதம் முதல் புரட்டாசி மாதம் வரை அறுவடை செய்யப்படும். மழை இருந்தால் செடி தண்ணீர் அழுகி விடுவதால், அறுவடை ஓரிரு மாதம் வரையில் மட்டுமே செய்யப்படுகிறது.

விவசாயிகள் அறுவடை செய்யும் வெள்ளரி பிஞ்சு, வியாபாரிகளுக்கு ஒரு கிலோ 15 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர். அதை வியாபாரிகள் வாங்கி வந்து, சாலையோரங்கள் மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதிகளில் கிலோ 40 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர்.வெயில் தாக்கம் அதிகரித்து காணப்படுவதால், சாலையில் செல்லும் வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் வெள்ளரி பிஞ்சை அதிகம் வாங்கிச் செல்கின்றனர். இந்தாண்டு மழையின்றி காணப்படுவதால், அறுவடை தொடர்ந்து செய்யலாம் என்ற எண்ணம் விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ளது.

## கேழ்வரகு அறுவடை தீவிரம்

**அவலூர்பேட்டை**:மேல்மலையனூர் பகுதியில் கேழ்வரகு அறுவடையில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.மேல்மலையனூர் ஒன்றியத்தின் பல பகுதிகளில் மழை இல்லாமல் காய்ந்து போய் உள் ளது. குறைந்த நீர் வளத்தில்

மூன்று மாதங்களில் பயிராகும் கேழ்வரகை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். தற்போது முற்றிய கேழ்வரகு கதிர்களை பல கிராமங்களிலும் அறுவடை செய்வதில் , விவசாயிகள் குடும்பத்தினரோடு ஈடுபட்டுள்ளனர்.இதன் அடிபகுதி மாடுகளுக்கு வைக்கோல் போல் உணவாக பயன்படுகிறது. தண்ணீர் வசதி இல்லாத நிலையில் ஜீவாதாரமான கேழ்வரகை வீட்டிற்கு தேவையான அளவில் குறைந்த நிலப்பரப்பில் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

## விவசாயிகளுக்கு வணிக வேளாண் கருத்தரங்கு

**சிறுபாக்கம்**:சிறுபாக்கம் அடுத்த கிருஷ்ணாபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கான வணிக வேளாண் கருத்தரங்கம் நடந்தது.மணிமுக்தா உழவர் மன்றம், உழைக்கும் கரங்கள் உழவர் மன்றம், கிரீன் ஸ்டார் உர நிறுவனம் சார்பில் நடந்த கருத்தரங்கிற்கு, விழுப்புரம் மாவட்ட உழவர் மன்றங்களின் கூட்டமைப்புத் தலைவர் சுப்ரமணியன் தலைமை தாங்கினார். கிரீன் ஸ்டார் உர நிறுவன விற்பனை அலுவலர் ராஜேஷ் கண்ணன், விரிவாக்க மேலாளர் பாஸ்கரன் முன்னிலை வகித்தனர். தொழில்நுட்ப ஆலோசகர் தேவராஜன் வரவேற்றார்.திண்டிவனம் வேளாண் ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர்கள் நடராஜன், கவிதா, கள அலுவலர் குழந்தை வடிவேல், உழவர் மன்ற சேவகர் சுப்ரமணியன், செயலர் தேவராஜ் உட்பட விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.கருத்தரங்கில், பயிர்கள் சாகுபடியில் கரும்பு, நெல், வேர்க்கடலை, காய்கறி உள்ளிட்டவற்றில் உர பராமரிப்பு, பயிர் இடைவெளி, நுண்ணூட்ட கலவை உரம், அதிக மகசூல் பெறுவது குறித்து தொழில்நுட்ப செயல் விளக்க பயிற்சியளிக்கப்பட்டது.

## வாய்க்கால் சீரமைப்பு

**கண்டாச்சிபுரம்**:கண்டாச்சிபுரம் ஏரிக்கு தண்ணீர் வரும் ஓடை வாய்க் கால்களை சீரமைக்கும் பணி நடந்து வருகிறது.கண்டாச்சிபுரத்தை சேர்ந்த மடவிளாகம் ஏரிக்கு தண்ணீர் வரும் வாய்க் கால் களில் செடிகள் வளர்ந்து தண்ணீர் வரத்தை தடை செய்திருந்தன. நீர் வள நில வள திட்டத்தின் கீழ் பொது பணித் துறையினரால் 30 லட்சம் மதிப்பீட்டில் வாய்க் கால்களை அகலப்படுத்தும் பணிகள் நடந்து வருகிறது.

## அதிக வரத்தாகும் மல்லிகைவிலை பாதியாக திடீர் சரிவு

**ஈரோடு**: வரத்து அதிகரித்ததால், கடந்த வாரம் கிலோ, 300 ரூபாய்க்கு விற்கப்பட்ட மல்லிகைப்பூ நேற்று, 150 ரூபாயாக சரிந்தது.ஈரோடு நகரில், பஸ் ஸ்டாண்ட், மணிக்கூண்டு, பி.எஸ்.பார்க், ரயில்வே ஸ்டேஷன், சூரம்பட்டி நால்ரோடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், 50க்கும் மேற்பட்ட மொத்த மற்றும் சில்லறை விற்பனைக்கடைகள் உள்ளன. மல்லி, முல்லை உதிரிப்பூக்கள், ஜாதிப்பூ, மரமல்லி, ரோஜாப்பூ மாலை, பச்சை, நீலம், சிகப்பு மற்றும் மஞ்சள் என்று பல்வேறு வண்ணங்களில் கவரும், பெங்களூரு ரோஸ், நெருப்பு ரோஸ், சம்பங்கி, செவ்வந்திப்பூ என்று பல்வேறு பூக்கள், விற்பனைக்கு குவிந்துள்ளன. கடந்த மாதத்தில், பனிப்பொழிவால் விளைச்சல் குறைவு மற்றும் முகூர்த்த சீஸன் காரணமாக, மல்லிகை விலை கிலோ, 500 ரூபாயை எட்டியது.இதுகுறித்து பூ வியாபாரி குட்டி கூறியதாவது:பனிக்காலம் முடிந்து, கோடைகாலம் துவங்கியதால், உற்பத்தி அதிகரித்து, ஈரோடு மார்க்கெட்டுக்கு, சத்தி, கோபி, சேலம் உள்பட, பல்வேறு பகுதிகளில் இருந்து மல்லிகை, குவிய துவங்கியுள்ளது. கடந்த, ஜனவரி, ஃபிப்ரவரி மாதங்களில் விலை அதிகபட்சமாக கிலோ, 600 ரூபாயை எட்டியது. தற்போது கிலோ, 350 ரூபாய்க்கு குறைந்து விட்டதால், மல்லிகை விற்பனை அதிகரித்துள்ளது. 50 கிராம் பாக்கெட், பத்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது.சித்திரை மாதம் வரை விலை குறைந்தே காணப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## வைக்கோலுக்கான தீவன அட்டை விரைவில் வினியோகிக்க ஏற்பாடு

**திண்டுக்கல்** : தீவன அட்டைக்காக விண்ணப்பித்துள்ள விவசாயிகள் அனைவருக்கும் தேர்தல் முடிந்தவுடன் அடையாள அட்டை வழங்கப்படும், என கால்நடைத்துறையினர் உறுதி அளித்துள்ளனர். வறட்சி பாதிப்பு காரணமாக கால்நடைகளுக்கு தீவனம் அளிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இதை தவிர்ப்பதற்காக மானிய விலையில் வைக்கோல் வினியோகிப்பதற்காக மையங்கள் திறக்கப்பட்டிருந்தன.

விண்ணப்பித்திருந்த விவசாயிகளுக்கு கால்நடைத்துறையிலிருந்து தீவன அட்டைகள் வினியோகிக்கப்பட்டிருந்தன. முதல் கட்டமாக 10 ஆயிரம் விவசாயிகளுக்கு அட்டைகள் வழங்கப்பட்டிருந்தன.

அதன் பின்னர் விண்ணப்பித்த விவசாயிகள் 5 ஆயிரம் பேருக்கு இதுவரை அட்டைகள் வினியோகிக்கப்படவில்லை. அதற்குள் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதால், அட்டை வினியோகம் நிறுத்திவைக்கப்பட்டது. மானிய விலை வைக்கோலை பெறமுடியாததால், இரண்டாவது கட்டமாக விண்ணப்பித்த விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கால்நடைத்துறையினர் கூறுகையில்,"முன்பதிவு அடிப்படையில்தான் வைக்கோல் வினியோகம் நடைபெற்று வருகிறது.

இரண்டாவது கட்டமாக விண்ணப்பித்தவர்களுக்கு அடையாள அட்டைகள் தயார் நிலையில் உள்ளது. தேர்தல் முடிந்தவுடன், அட்டைகளை பெற்று தேவையான வைக்கோலை பெற்றுக் கொள்ளலாம்,' என்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வரத்து அதிகரிப்பால் பலாப்பழம் விலை சரிந்தது**



**கோவை:** பலாப்பழம் வரத்து அதிகரித்துள்ளதால், கடந்த மாதத்தில் ரூ.200க்கு விற்கப்பட்ட 1 பலாப்பழம் ரூ.80க்கு விற்கப்படுகிறது. பிப்ரவரி மாதம் முதல் பலாப்பழ சீசன் தொடங்கியுள்ளது. இந்நிலையில் கோவை உக்கடம் பழமார்க்கெட்டுக்கு கேரளா மற்றும் தமிழ்நாட்டில் பன்ருட்டி, புதுக்கோட்டை பகுதிகளில் இருந்து பலாப்பழங்கள் விற்பனைக்கு வருகிறது. கடந்த மாதங்களில் 3 டன் அளவே பலாப்பழங்கள் மார்க்கெட்டுக்கு வந்தன. இதனால், 1 பழம் ரூ.200

முதல் ரூ.400 வரை விற்கப்பட்டது. தற்போது கேரள மாநிலம் சாலக்குடி, மழப்புரம், திருச்சூர், கோட்டைக்கல் மற்றும் புதுக்கோட்டை, பன்ருட்டி பகுதிகளில் பலாப்பழ விளைச்சல் அமோகமாக உள்ளதால், வரத்தும் அதிகரித்துள்ளது.

கோவை பழமார்க்கெட்டுக்கு தினமும் சராசரியாக 100 முதல் 200 டன் பலாப்பழங்கள் வருகிறது. இதனால், விலையும் குறைந்துள்ளது. ரகத்திற்கு ஏற்ப ஒரு பலாப் பழம் ரூ.80 முதல் ரூ.100 வரை விற்கப்படுகிறது.

**வரத்து குறைவால் மிளகாய் விலை உயர்ந்தது**



**சேலம்**: சேலம் லீ பஜார் மார்க்கெட்டுக்கு கொளத்தூர், ஆந்திரா, உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மிளகாய் வருகிறது. இந்தாண்டு எதிர்பார்த்த மழை இல்லாததால் மிளகாய் உற்பத்தி பாதித்துள்ளது.

இதனால் லீபஜார் மார்க்கெட்டுக்கு மிளகாய் வரத்து 30% வரை குறைந்துள்ளது. கடந்த 2 வாரத்தில் மிளகாய் விலை கிலோவுக்கு 25 வரை உயர்ந்துள்ளது.

மொத்த விற்பனையில் ஒரு கிலோ அளவு கொண்ட கொளத்தூர் மிளகாய் ரூ.120, ஆந்திரா மிளகாய் 80 முதல் 100 வரையும், ராம்நாடு ரகம் ரூ.75 முதல் ரூ.80 வரையும், குண்டு ரகம் காம்புடன் ரூ.105 வரையும், குண்டு ரகம் காம்பு நீக்கியது ரூ.130 வரையும் விற்றதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**வெளிநாட்டு வர்த்தகர்கள் பங்கேற்பால் தேயிலை ஏலம் அமோகம்**



**குன்னூர்**: வெளிநாட்டு வர்த்தகர்கள் பங்கேற்பால் குன்னூரில் 90 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. நீலகிரியிலுள்ள குன்னூர் அரசு கூட்டுறவு ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 14வது ஏலம் நேற்று முன்தினம் நடந்தது.

இதில் 7 லட்சத்து 71,387 கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இந்த ஏலத்தில் உள்நாடு, வெளிநாட்டு வர்த்தகர்கள் பங்கேற்றனர். இதனால், 90 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. ஆனால், அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு 3 வரை விலை சரிந்தது.

இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண தேயிலை தூள் கிலோ ஒன்றுக்கு ரூ.52 முதல் ரூ.55 வரையிலும், உயர்வகை ரூ.70 முதல் ரூ.75 வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.60 முதல் ரூ.65 வரையிலும், உயர்வகை ரூ.75 முதல் ரூ.80 வரையிலும் விலை கிடைத்தது. விற்பனையாகாமல் தேக்கமடைந்த தூளும் இந்த வாரம் ஏலம் போனது.

நீண்ட இடைவெளிக்கு பின்னர் வர்த்தகர்களின் பங்களிப்பு அதிகரித்து இருந்தாலும் விற்பனை அளவு உயர்வதற்கு முக்கிய காரணம் தேயிலை தூளின் விலையை குறைத்து வழங்கியது தான்.

இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**ரஷ்யா-உக்ரைன் பிரச்னையால் சூரியகாந்தி எண்ணெய் விலை உயரும்...**



**புதுடெல்லி**: ரஷ்யா-உக்ரைன் பிரச்னையால் சூரியகாந்தி எண்ணெய் விலை உயரக்கூடும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர். சூரியகாந்தி வித்து உற்பத்தியில் உலகிலேயே ரஷ்யா முதல் இடத்திலும் உக்ரைன் 2வது இடத்திலும் உள்ளது. இந்த இரு நாடுகளில் இருந்தும் பல்வேறு நாடுகளுக்கு சூரியகாந்தி வித்து ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்நிலையில், ரஷ்யாஉக்ரைன் நாடுகளுக்கிடையே தற்போது நிலவும் எல்லை பிரச்னையால் அங்கு பதட்டம் நீடிக்கிறது. இதனால், சூரியகாந்தி வித்து அங்கிருந்து ஏற்றுமதி செய்யமுடியாத சூழ்நிலை உருவாகும் என்று இந்தியாவில் சமையல் எண்ணெய் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் கவலை தெரிவித்துள்ளனர். ரஷ்யாஉக்ரைனில் தற்போது நிலவும் சிக்கல் நீடித்தால் ஏற்றுமதி பாதிக்கும் இதன் காரணமாக சூரியகாந்தி எண்ணெய் விலை உயரும் என்றும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

**விலையேற்றம் காரணமாக மக்காச்சோளம் வரத்து அதிகரிப்பு**

**திருக்கோவிலூர்**, : திருக்கோவிலூர் அடுத்த அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு கடந்த ஒரு மாதமாக 2 ஆயிரம் மூட்டைகள் முதல் 1500 மூட்டைகள் வரை மக்காசோளம் விற்பனைக்கு வந்து கொண்டிருக்கிறது. திருக்கோவிலூர் வட்டம் ஆலம்பாடி, கண்டாச்சிபுரம், சு.பில்ராம்பட்டு, சித்தப்பட்டிணம், ஜம்பை, மேலந்தல், அத்தியந்தல், அனந்தபுரம், பனமலைப்பேட்டை, சங்கராபுரம் வட்டம் அத்தியூர், அரியலூர், ஜம்படை,

சீர்பாதநல்லூர், ஆற்கவாடி, அரும்பராம்பட்டு, சீர்ப்பனந்தல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மக்காசோளம் தான் விற்பனைக்காக வந்து கொண்டிருக்கிறது. கடந்த மாதம் 100 கிலோ எடையுள்ள மூட்டை ஒன்றுக்கு ரூ. 1290 விற்பனையானது. கடந்த இரண்டு நாட்களாக ஒரு மூட்டை ஒன்றுக்கு ரூ. 1325வரை விற்பனையானது.

கடந்த ஆண்டு இந்த பருவத்தில் இந்த விற்பனை கூடத்துக்கு தினசரி 4 ஆயிரம் மூட்டைகள் விற்பனைக்காக வந்தது. இந்த ஆண்டு போதிய மழை இல்லாததாலும், மின்சாரம் இன்றி தண்ணீர் பாய்ச்ச முடியாமலும் விவசாயிகள் மக்காசோளம் சாகுபடி செய்வதை தவிர்த்து வந்தனர். மேலும் மக்காசோளம் சாகுபடி செய்த விவசாயிகள் தண்ணீர் இன்றி சாகுபடி செய்த பயிரை கூட காப்பாற்ற முடியாமல் போனது. இதனால் ஒரு ஏக்கருக்கு 30 மூட்டை அறுவடையாகும் மக்காசோளம் 5 மூட்டைகள் கூட தற்போது கிடைக்கவில்லை. இருந்த போதிலும் சாகுபடி செய்து மக்காசோளத்தை அறுவடை செய்த விவசாயிகளுக்கு போதிய விலை கிடைத்துள்ளதால் அவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இனி வரும் காலத்தில் நெல்லுக்கு பதிலாக மக்காசோளம் பயிரிட விவசாயிகள் மத்தியில் ஆர்வம் அதிகரித்துள்ளது.